**DEPOSITION OF WITNESS**
**(chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, CUDDALORE AT VRIDHACHALAM.**
**S.C.No.170/2025**
**P.W.14- (L.W.15)**

| | | |
|---|---|---|
| பெயர் | : | நிங்காராஜீவ் |
| த/பெ | : | தொட்டாபுட்டையா |
| முகவரி | : | மதுவனஹல்லி, கொல்லைஹல், சாம்ராஜ் நகர், கர்நாடகா |
| கிராமம் | : | |
| நகரம் | : | – |
| வட்டம் | : | கர்நாடகா |
| தொழில் | : | CISF நெய்வேலி |
| வயது | : | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2026

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் அனுமதிக்கப்பட்டது. அவரது வழக்கறிஞர் ஆஜர். சாட்சிக்கு மொழிப்பெயர்பாளராக இந்தி மொழி ஆசிரியர் திருமதி. தர்பார் ராஜலட்சுமி ரெவனி நியமிக்கப்பட்டுள்ளார். சாட்சியின் ஆதார் அடையாள அட்டை எண்.7878 7558 1189 சரிபார்க்கப்பட்டது. சாட்சிக்கு திரு.இரா.வேல்முருகன், மொழி பெயர்ப்பாளர் என்பவர் மூலம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை–(மொழிபெயர்பாளர் உதவியுடன்)**

நான் தற்போது CISF நெய்வேலியில் வேலை செய்கிறேன். நான் தலைமை காவலராக பணிப்புரிகிறேன். நான் நெய்வேலி மைன்ஸ் -1ல் வேலை செய்கிறேன். சம்பவ சமயம் நான் ஜி கம்பெனியில் வேலை செய்தேன். சம்பவ காலத்திலும் நான் தலைமை காவலராக பணிப்புரிந்தேன். அப்போது நான் எழுத்தராக வேலை பார்த்தேன். எங்கள் கம்பெனி தற்போது மைன்ஸ் -1 அப்பர் பகுதியில் பணியில் உள்ளது. எங்கள் கம்பெனிக்கு 21 அல்லது 22 டியூட்டி போஸ்ட் உள்ளது. ஆய்வாளர் மேற்பார்வையில் நான்தான் டியூட்டி நியமிப்பேன். எங்களுக்கு கிடைக்கும் டியூட்டி போஸ் ஸ்டரன்த்தை பொறுத்து டியூட்டி போஸ்டின் எண்ணிக்கையை நிர்ணயிப்போம். CISF டியூட்டி எம்ப்ளாய்மென்ட் என்பது நாங்கள் டியூட்டி போஸ்டை மட்டும் நிர்ணயம் செய்வோம். அந்த டியூட்டி போஸ்ட்டிற்கு எண் குறிப்பிட்டு டோக்கன்களை ஒரு பையில் போட்டு வைத்துவிடுவோம். பின்னர் டியூட்டிக்கு

வரும் கான்ஸ்டேபிள் ஒவ்வொருவராக அந்த பையில் கையை விட்டு ஒரு டோக்கனை எடுத்து அதில் வரும் எண்ணிற்குரிய டியூட்டி போஸ்டிற்கு சென்று பணி செய்வார்கள். 09.06.2024 ம் தேதி ஏ ஷிப்டிற்கு காலை 5.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை டியூட்டி பார்ப்பதற்காக 14 டியூட்டி போஸ்ட் நியமித்து அதற்கு கான்டேபிள்களை டியூட்டிற்கு அனுப்பிவைத்தேன். தொப்பளிக்குப்பம் ரேம்ப் ஏரியா கிழக்கு பக்கம் உள்ள டியூட்டி பாய்ன்ட்டிற்கு அங்கித்சிங் என்ற கான்ஸ்டேபிள் டோக்கன் மூலம் அனுப்பப்பட்டார். அன்று டியூட்டி இன்சார்ஜாக ASI நிக்சன் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் 14 டியூட்டி போஸ்டிற்கும் டியூட்டி இன்சார்ஜ் ஆவார். அந்தந்த டியூட்டி போஸ்டிற்கு கான்ஸ்டேபிள்கள் சென்று பொசிசன் எடுத்தப்பிறகு காலை 6.00 மணிக்குள் டியூட்டி இன்சார்ஜ் ASI நிக்சன் என்பவரிடம் சுவிட்சுவேசன் ரிப்போர்ட் கொடுக்கவேண்டும். 09.06.2024 ந்தேதி தொப்பளிக்குப்பம் ரேம்ப் ஏரியாவில் ஒரு இறப்பு நடந்தது. 09.06.2024 ந் தேதி காலை 10.35 மணிக்கு டியூட்டி இன்சார்ஜ் ASI நிக்சன் என்பவர் எனக்கு போன் செய்து இன்று கம்பெனி கமென்டர் யார் என்று கேட்டார் அதற்கு நான் இன்ஸ்பெக்டர் ஷா உள்ளார் என்று ஏன் கேட்கிறிர்கள் என்று சொன்னேன். நான் அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். ஒரு நபர் தொப்பளிக்குப்பம் ரேம்ப் ஏரியாவில் கீழே விழுந்துக்கிடப்பதாக போனில் சொன்னார். அதன் பிறகு நான் இன்ஸ்பெக்டர் ஷா-விடம் டெலிபோனில் சொன்னேன். அவர் ட்ரைனிங் ஹாஸ்டலில் உள்ளதாகவும் தான் வருவதாகவும் கூறினார். இன்ஸ்பெக்டர் ஷா இருசக்கர வாகனத்தில் வந்து என்னையும் அழைத்து சென்றார். நாங்கள் தொப்பளிக்குப்பம் ரேம்ப் ஏரியாவிற்கு காலை 11.00 மணிக்கு சென்றோம். இறந்தவரின் பிரேதம் மண் மேட்டிற்கு மேல் வைத்திருந்தார்கள். எதிரி அங்கித்சிங் அவரது டியூட்டி பாய்ன்ட்டில் இருந்தார். பொதுமக்களுடன் நான் இருந்தபோது இன்ஸ்பெக்டர் எதிரி அங்கித்சிங்கிடம் சென்று விசாரித்தார். அங்கு இறந்துக்கிடந்ததாக சொல்லப்படும் நபர் மீது தண்ணீர் எடுத்து முகத்தில் தெளித்திர்களா என்று கேட்டார். டியூட்டி போஸ்டிலிருந்த அங்கித்சிங் காலை 10.30 மணிக்கு டியூட்டி போஸ்டில் இருந்ததாகவும் அப்போது ஒரு நபர் மது குடித்துவிட்டு ஆடிக்கொண்டு ரேம்ப் வழியாக மைன்சிற்குள் வந்ததாகவும் அவரை அங்கித்சிங் தடுத்தபோது அந்த நபர் மதுபோதையில் கீழே விழுந்துவிட்டதால் அவருக்கு நாடி இருந்ததால் டியூட்டி போஸ்டிலிருந்து தண்ணீர் எடுத்துவந்து முகத்தில் தெளித்ததாக நான் கூறவில்லை. ASI நிக்சன் பக்கத்து போஸ்டிலிருந்த அனுஜ் என்பவருக்கு போன் செய்து அனுப்பியதாக கூறினார். அதற்குள் மக்கள் அங்கு வந்துவிட்டதால் அங்கித்சிங்கும், அனுஜ்ம் அந்த நபரை மைன்ஸ் -1 பள்ளத்திலிருந்து மேலே தூக்கி கொண்டு போட்டதாக கூறினார் என்றால் யார் தூக்கிக்கொண்டு போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நாங்கள் சம்பவ இடம் சென்று பார்த்தபோது பொதுமக்கள் 20 பேர் இருந்தார்கள். அவர்கள் அந்த நபரை பார்த்து இறந்துவிட்டார் என்றும் அவர் எந்த ஊர் என்று அடையாளம் தெரியவில்லை என்றும் கூறினார்களா என்று எனக்கு தெரியாது. அதன் பிறகு அங்கு வந்த ஆம்புலன்சின் மூலம் அந்த இறந்த நபரை ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். அதன் பிறகு மதியம் II Shift வந்த HC, GD

ராஜா என்ற நபரை தொப்பளிக்குப்பம் ரேம்ப் ஏரியாவில் டியூட்டிற்கு போஸ்ட் செய்துவிட்டு அங்கித்சிங்கை AK Gateway view pointற்கு டியூட்டிக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். அதன் பிறகு இறந்தவரின் குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் மைன்ஸ்சிற்குள் வந்து இறந்த நபரை CISF செக்கியூரிட்டிதான் அடித்து கொன்றுவிட்டதாக போராட்டம் செய்தார்கள் என்று என்னிடம் கூறினார்கள் எனக்கு தமிழ் தெரியாததால் எனக்கு சரியாக புரியவில்லை. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பு கு.வி(மொழிபெயர்பாளர் உதவியுடன்)</u>**

எங்களுக்கு ஆம்புட்ஸ் ரோந்துவண்டி உள்ளதா என்றால் இல்லை. எனக்கு அன்று எங்கு பணி நியமனம் என்றால் ஏ.கே. கேட்டில் பணி. எனது பணி இடத்திலிருந்து சம்பவ இடம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 10 அல்லது 15 கி.மீ தொலைவில் உள்ளது. பணி முடிந்து சுவிட்சுவேஷன் ரிப்போர்ட் தரவேண்டும் என்றால் பணி முடித்தப்பிறகு தரவேண்டும். அசம்பாவிதமோ வேறு ஏதும் தவறு நடந்தால் உடனடியாக கமென்டராக தகவல் அளிக்க வேண்டும் என்றால் சரிதான். வாக்கி-டாக்கி எனக்கு இருந்தது. தொப்பளிக்குப்பம் ரேஞ்ச் பூசல் உள்ள இடம் என்றால் அவ்வபோது நடக்கும். மேற்படி இடமானது 150 அடி மேல் பள்ளப்பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் வேற்று நபர்கள் உள்ளே வந்தால் குறைந்த அளவு வலிமை பயன்படுத்தி தடுக்கலாம். 150 அடி உயரம் கொண்ட பகுதி என்பதால் மேலிருந்து தவறி விழுபவருக்கு உயிரிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் நடக்கலாம். இந்த நிகழ்வு எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அன்று ஆஜரிலிருந்த CISF வீரர்கள் என்ன சுவிட்சுவேஷன் ரிப்போர்ட் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தகவல் கிடைத்து அங்கு செல்வதற்கு அரை மணி நேரம் ஆகியது. நான் சென்ற போது அங்கு அடிப்பட்டவர் இல்லை கொண்டு சென்றுவிட்டார்கள். அங்கு CISF வீரர்களுக்கு எதிராக எவ்வித போரட்டமும் நடக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு தொடர்பாக என்ன நிகழ்வு நடந்தது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

**(மறுவிசாரணை இல்லை)**

Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness in the presence of the accused and admitted by him/her to be correct.

Sd/- Thiru.S.Vijayakumar, M.A., M.L.,
III Additional District and Sessions Judge,
Cuddalore at Vridhachalam.